செய்தி வெளியீடு எண்: 487 நாள் : 13.09.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (13.9.2013) தலைமைச் செயலகத்தில், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 2 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், என மொத்தம் 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக தொடங்கி வைத்தார்கள்.

உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வியினை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் பெற வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் உயரிய நோக்கமாகும். கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி சிரமப்படாமல் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே கல்வி கற்பதற்கு ஏதுவாக தமிழக அரசு கல்லூரிகளைத் தொடங்கி வருகிறது. இதன் மூலம், கிராமப்புற மாணவ, மாணவியர் கல்வியில் இடைநிற்றலைத் தவிர்த்து, உயர்கல்வி கற்று நல்ல வேலை வாய்ப்புகள் பெற்றிடவும், அதன் மூலம் பொருளாதார நிலை உயர்ந்து வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடவும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மாணவ, மாணவியர் உயர்கல்வியினைத் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற நோக்கில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 22 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டு பெருமளவிலான கிராமப்புற மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர். இத்தகைய பயனுடைய உயர்கல்வி வசதியை கிராமப்புற மாணவ, மாணவியருக்கு தொடர்ந்து வழங்கிடும் நோக்கில் நடப்பாண்டில் மேலும் 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடி, தஞ்சாவூர் மாவட்டம் – பேராவூரணி, திருப்பூர் மாவட்டம் – காங்கேயம், நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம்,

தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் (மகளிர்), கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர், காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம் – கடலாடி, திருவாடணை, முதுகுளத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டம் – சிவகாசி ஆகிய 12 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், பெரம்பலூர் மாவட்டம் – வேப்பூரில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மற்றும் கடலூர் மாவட்டம் – திட்டக்குடியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, என மொத்தம் 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்த 14 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் 210 ஆசிரியர் பணியிடங்களும், 238 ஆசிரியரல்லா பிற பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், பணியாளர் சம்பளம், அலுவலக செலவினம் ஆகியவற்றிற்கும் மற்றும் கணினிகள், அறைகலன்கள், புத்தகங்கள், கருவிகள் போன்றவை கொள்முதல் செய்வதற்கும் 17 கோடியே 9 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளுக்கு 105 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்ட இந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக பி.ஏ., (ஆங்கிலம்), பி.ஏ., (தமிழ்), பி.காம்., பி.எஸ்.சி., (கணிதம்) மற்றும் பி.எஸ்.சி., (கணினி அறிவியல்) ஆகிய ஐந்து பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான மாணவ, மாணவியர் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

மேலும், இந்த நிகழ்ச்சியில், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவி செல்வி எஸ். பத்மாவதி மாணவ, மாணவியர் சார்பில் நன்றி தெரிவித்து பேசுகையில், “நான் +2 முடித்து கல்லூரிக்கு செல்ல இயலாத ஏழ்மையான மாணவி. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆசியினால் இன்று இங்கு தொடங்கி வைக்கப்பட்ட இந்த கல்லூரியில் நான் பி.ஏ., (ஆங்கிலம்) சேர்ந்துள்ளேன். இந்த கல்லூரி எனக்காகவே திறக்கப்பட்டது போல் நான்

உணர்கிறேன். என்னைப் போன்று உள்ள பல ஏழ்மையான மாணவ, மாணவியர்களுக்கு இந்த கல்லூரி ஒரு அறிவுத் திருக்கோயில் போன்றது. மீண்டும் நாங்கள் படிப்போம் என்று நினைக்காத தருணத்தில் அம்மா அவர்கள் கடவுள் போன்று உதவியுள்ளார்கள். ஆகையால் அம்மா அவர்களுக்கு அனைத்து மாணவ, மாணவியர்களின் சார்பிலும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு பி. பழனியப்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு பி. தங்கமணி, தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு அபூர்வ வர்மா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 13.9.2013